O.S. No: 100/2025

பெயர்: திரு.சண்முகம்

**வா.சா. 5**

24-09-2025

**நீதிமன்ற அனுமதியுடன் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க ஆணையர் எனக்கு வழங்கிய கடிதம் **எக்ஸ்-2 ஆகும்.**

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மாநகராட்சியில் நகர நில அளவியராக 01/05/2023 இல் பணியில் சேர்ந்தேன். எனக்கு முன்பு லோகநாதன் என்பவர் பணியில் இருந்தார். தற்பொழு அவர் தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரிகிறார். அவருக்கு தான் இந்த ஆவணங்கள் பற்றி நேரடியாக தெரியும் என்றால் எனக்கு தெரியாது. பெயர் மாற்றம் 2014 இல் ஏற்பட்டதாக ஆணையர் 2018 இல் தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரி. 2014 இல் ஏற்பட்ட ஆவணத்தை ஆணையர் சந்தேகப்பட்டு தான் 2018 வரை கையெழுத்து போடவில்லை என்றால் எனக்கு தெரியாது. அதற்பின் வந்த ஆணையரிடம் கூட்டத்தோடு கூட்டமாக கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த ஆவணம் தயார் செய்யப்பட்ட போது கூரை வீடு இருந்ததாக கண்டு எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ளதா என்று எனக்கு நேரடியாக தெரியாது. தமிழகஅரசு 1988 இல் இருந்து கூரை வீடுகளுக்கு வரி விதிப்பை ரத்து செய்து விட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனவே இந்த ஆவணம் கூரை வீடு இருந்ததாக பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே TSLR நம்பரில் அதிக விஸ்தீர்ணம் இருக்கும் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீர்ணம் இருக்கும் என்று தனி குறிப்பு இருக்கும். நான் இந்த சொத்தை நேரடியாக பார்க்கவில்லை. இந்த வழக்கின் 7 ஆம் பிரதிவாதி

நகராட்சியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்ட தகவலுக்கு தாவா சொத்தில் வரி விதிப்பு எதுவும் இல்லை என்று பதில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது . TSLR இல் நான்கெல்லை குறிப்பிடமாட்டோம். நான்கெல்லையை பார்த்தால் தான் TSLR இல் குறிப்பிட்டுள்ள சொத்தும் தாவா சொத்தும் ஒன்று தானா என்பது தெரியவரும் என்றால் எனக்கு தெரியாது . என்னிடம் காணப்பிக்கப்படும் ஆவணம் நகராட்சியில் TSLR ஆன் லைன் காப்பி என்றால் சரி. இதில் காலம் 1 இல் 1073 மேல காவேரி, சர்வமானிய தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 இல் மேலக்காவேரி, சுவாமிமலை சாலை என்று கையால் எழுதப்பட்டுள்ளது என்றா் சரி . என்னிடம் காண்பிக்கப்படும் ஆன்லைன் காப்பி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது தான். அது **எக்ஸ்-3 ஆகும்.** சர்வாமானியம் என்று ஆன்லைன் காப்பியிலும் வா .சா.ஆ. 1 இல் மேலக்காவேரி, சுவாமிமலை சாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் எது உண்மையென்று எனக்கு தெரியாது என்றால் சரி. பி.சா.ஆ.2 இல் 1073 அய்யனார் கோயில் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி . ரிசெட்டில்மெண்ட் சர்வேயில் தாசில்தார் நேரில் பார்வையிட்டு அளந்து தான் பதிவு செய்வார் என்றால் சரி. ரிசெட்டில்மெண்டை பார்த்து தான் அதற்குபின் வந்த ஆவணம் பதிவு செய்யப்படும் என்றால் தெரியாது . ரிசெட்டில்மெண்ட் படி தான் அய்யனார் கோயில் என்று பி.சா.ஆ. 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 1908 பழைய நகர அளவை பதிவேட்டில், ஸ்ரீ அய்யனார் கோயில் என்று உள்ளது. இந்த பதிவேட்டின் நகல் **எக்ஸ்-4 ஆகும்.** இது பிரட்டிஷ் காலத்தில் தயாரிக்கப்பட்டது . தற்பொழுது தவறான ஆவணங்களின் படி TSLR தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 934 இல் ஸ்ரீ அய்யனார் கோயில் உள்ளதாக குறிப்பு உள்ளது.

**மற்ற பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S :100/2025</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">வா.சா. 6</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">திரு. மணிசெல்வம்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">வருவாய் உதவியாளர், கும்பகோணம் மாநகராட்சி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">பிச்சைமணி</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2"></td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">30</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 24-09-2025

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் . நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் மாநகராட்சி ஆணையர் வரி விதிப்பு தொடர்பாக என்னை சாட்சியமளிக்க உத்தரவிட்டதன் பேரில், நான் இன்று சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். ஆணையர் கொடுத்த கடிதம் **எக்ஸ்-5 ஆகும்.** ஆயிபொன்னு என்பவர் பெயரில் 2014 ஆம் வருடம் 33B/1073, மேல காவேரி, சுவாமிமலை ரோடு என்பவருக்கு ஏற்பட்ட சொத்து வரி ரசீதுகளின் உண்மை நகலை (3 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். அது **எக்ஸ்-6 வரிசை ஆகும்.**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2016 இல் நான் பணியில் சேர்ந்தேன் . நான் வரி விதிப்பு சம்மந்தமான பொறுப்பை நான் தான் பார்க்கிறேன் . கணினியில் பில் போடுவது 2009 லேயே வந்துவிட்டது . அதற்குமுன் கையால் தான் போடுவோம். 2014 க்கு முன்பு ஆயிபொன்னு பெயருக்கு சொத்து வரி ரசீதுகள் உள்ளதா என்று தெரியாது . 29/01/2014 இல் ஏன் இரண்டு பில்கள் போடப்பட்டுள்ளது என்றால் இடம் பத்தாததால் இரண்டு பில்

போடப்பட்டுள்ளது. இதில் கதவு எண் 33B என்று போடப்பட்டுள்ளது. எதனடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆயிபொன்னு பெயரில் பத்திரம் இருப்பதால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த பத்திரம் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் இருக்கும். அதை தாக்கல் செய்யலாமா என்றால் தேடி பார்க்க வேண்டும். 2009 மற்றும் அதற்கு முன்பு வரி விதிப்பு ஏற்பட்ட நபர்களின் பெயர்கள் மற்றும் அதற்கான அடிகட்டைகள் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் தேடி பார்க்க வேண்டும் . 2014 க்கு பின்னர் வரி விதிப்பு இல்லையா என்றால் ஆயிபொன்னு பெயரில் இருந்து கன்னையன் பெயருக்கு மாறியுள்ளது. அதற்குண்டான ஆவணங்களும் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. தகவல அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ராமதாஸ் என்பவர் தகவல் கேட்டு எங்கள் அலுவலகத்தில் கொடுத்த பதில் இது தான் என்றால் ஆமாம் . அது **பி.சா.ஆ. 12 ஆகும்.** எங்கள் பதிலில் தாவா சொத்திற்கு எந்தவிதமான வரிவிதிப்பும் ஏற்படவில்லை என்று பதில் கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம் . தற்பொழுது காலி மனையாக உள்ளது. எப்போது வீடு இருந்தது என்று தெரியாது.

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பி.சா.ஆ. 12 சம்மந்தமாக யார் யார் இடத்தை பார்த்தார்கள் என்றால் ஆர்ஐ இடத்தை பார்த்தார். அவர் பார்த்த போது அங்கு எந்தவிதமான கொட்டகையோ, வீடோ இல்லாததால் தான் இந்த பதில் கொடுக்கப் பட்டுள்ளது என்றால் ஆமாம். எக்ஸ்–1 இல் வீட்டு கதவு எண் 38 என்று போடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 வீட்டு வரி ரசீதில் 33B என்று போடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.4 இல் அய்யனார் கோயில் என்று உள்ளது என்றால் சரி. வீட்டு வரி போடவேண்டும் என்றால் போய் அந்தயிடத்தை பார்வையிட்டு இடத்தில் என்ன இருக்கிறது என்று நிர்ணயம் செய்து தான் வரி விதிப்பு செய்ய வேண்டும் என்றால் சரி . வீட்டு வரி விதிப்பு செய்த

லெட்ஜர் மாநகராட்சியில் உள்ளதா என்றால் தெரியாது . வருவாய் ஆய்வாளர் போய் இடத்தை பார்த்து நடைமுறையை பின்பற்றி வரி விதிப்பு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது . நேரில் போய் பார்க்காமல் தவறான நம்பருக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . 2010 க்கு முன் உள்ள வரி விதிப்பு எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது . நாங்கள் எதையுமே பார்க்காமல் மாநகராட்சிக்கு வரி என்ற பெயரில் பணம் வந்தால் போதும் என்று வரி ரசீதுகளை கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

பி.சா.ஆ.4 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று என்றால் சரி . இது சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**மற்ற பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.